# ஈக்கோன் குருமடம் உருவாகிய வரலாறு

## வரலாற்றுப் பின்னணி :

சுவிட்சர்லாந்து நாட்டில் வாலே (Valais) பகுதியில் ஆல்ப்ஸ் மலையடிவாரத்தில் ரீட் (Riddes) கிராமத்துக்கு அருகில் அமைந்துள்ள பண்ணை விளைநிலம்தான் ஈக்கோன். ஷத்தியோன் பிரபுவான பீற்றர் தெ லெ தூர் என்பருக்குச் சொந்தமான எஸ்கோன் (Esconnaz) என்று அழைக்கப்பட்ட அப்பகுதியை அர்ச். பெர்நார்ட் கேனன் என்ற சபைத் துறவிகள் (The Canons of St. Bernard) கி.பி. 1302-ம் ஆண்டு வாங்கினார்கள். 1892-ல் அங்கே ஒரு விவசாயப் பள்ளியை ஏற்படுத்தி, அதில் “வயல் வெளிகளின் மாதா” (Our Lady of Fields) சிற்றாலயத்தை அமைத்தார்கள். பின்னர் 1992-ல் விவசாயப் பள்ளியானது சீயோன் அருகிலிருக்கும் ஷத்தோனெஃப் நகருக்கு மாற்றப்பட்டது. இதனால் ஈக்கோன் என்று மருவி அழைக்கப்பட்ட அந்த இடத்தை பழங்கள், காய்கறிகள் விளைவிக்க துறவிகள் பயன்படுத்தினார்கள். பின்னர் 1940-ம் ஆண்டு அங்கு கட்டப்பட்டிருந்த கட்டிடத்தில் தங்கள் சபையின் வேதசாஸ்திரம் கற்கும் மாணவர்களைத் தங்கவைத்தனர். அவர்களை கண்காணிக்க சங். ரெனே பெர்த்தோ என்ற துறவி நியமிக்கப்பட்டார். பின்னர் ஏதோ ஒரு காரணத்திற்காக அந்த மாணவர்கள் மார்ட்டினி என்ற நகருக்கு இடம் பெயர்ந்தார்கள். அதன்பிறகு பயனில்லாத விடப்பட்ட ஈக்கோன் பகுதியை கவனித்துக்கொள்ள வயதான துறவியும் சில சகோதரர்களும் நியமிக்கப்பட்டனர். அங்குள்ள இல்லமும், கட்டிடங்களும் நாளடைவில் சிதைந்து பழுதடைந்துபோனது! அதனை சீர்செய்ய பண வசதி இல்லாததால் அந்த இல்லத்தை விற்றுவிட துறவிகள் தீர்மானித்தனர்.

## பங்கு குரு கண்ட காட்சி

இதற்கிடையில் ஈக்கோன் அமைந்துள்ள ரீட் மற்றும் சாக்ஸன் பகுதிகளில் விசுவாசத்தில் தளர்ந்து, திருச்சபைக்கு குறிப்பாக குருக்களுக்கு எதிரான மனப்பான்மை அதிகரிக்கலாயிற்று. அது எந்த அளவுக்கென்றால் ரீட் பங்கில் குருக்கள் பொறுப்பேற்கத் தயங்கினர்.

ஆகையால், ரீட் பங்கு சில ஆண்டுகளாக பங்கு குருக்களின்றி வாடியது. 4 குருக்கள் மறுத்துவிட்ட நிலையில் 1967-ல் சங். பீற்றர் எப்பினே சுவாமி என்பவர் அங்கே பங்குத் தந்தையாக நியமிக்கப்பட்டார். அவர் பொறுப்பேற்ற உடனேயே தமது பங்கு விசாரணையைத் துவக்கவே, அதன் காரணமாக ஈக்கோனுக்கு வருகை தந்தார். அதன் பழைய கட்டிடத்தின் கதவினைத் தட்டிய குருவானவருக்கு எந்தவிதமான பதிலும் இல்லை! அதனை கவனித்து வந்த துறவி பண்ணை நிலத்தில் வேலையாக இருந்தார். கதவு திறந்து உள்ளே நுழைந்த பங்கு குரு சற்று அயர்ந்து போனார். பாழடைந்து சிதைந்துப் போன அந்தக் கட்டிடத்தின் அவல நிலையைக் கண்டு வேதனை அடைந்தார். அந்த அதே கண நேரத்தில் அவர் மணக்கண்களுக்கு அந்த கட்டிடம் குரு மாணவர்களால் நிறைந்த குருமடமாக திகழுவதைப் போன்ற காட்சியைக் கண்டு திகைத்துப் போனார்! “ஆஹா இங்கே ஒரு குருமடம் அமைந்தால் எவ்வளவு நலமாக இருக்கும்!” என்ற எண்ணம் அவருடைய மனதில் தோன்றியது. உடனே தாம் கண்ட காட்சியையும், எண்ணத்தையும் அர்த்தமற்ற கற்பனையாக அகற்றிய அவரை, துறவி எதிர்கொண்டு வரவேற்றார். குருவின் உணர்வினை அறிந்து கொண்ட துறவி, “ஆம்! சுவாமி! இங்கே எல்லாம் முடிந்து போயிற்று. இங்கே செய்வதற்கு ஒன்றுமில்லை” என்று கூறினார். அதனைக் கேட்ட குரு வருந்தினார். ஆம்! எல்லாம் முடிந்து போனது என்று கைவிடப்பட்ட அந்த ஈக்கோனிலிருந்தே சர்வேசுரன் மறுபடியும் அனைத்தையும் துவக்கப்போகிறார். திருச்சபையைப் புதுப்பிகக்ப் போகிறார் என்பதை அப்போது யாரும் அறிந்திருக்கவில்லை! அதற்கான ஒரு சம்பவம் வெகு விரைவில் நிகழ்ந்தது!

## சிற்றுண்டிச் சாலையில் கேட்ட சேதி!

அது 1968ம் ஆண்டு பெரிய வியாழன், ஏப்ரல் 11-ம் நாள், சாக்ஸன் பகுதியைச் சேர்ந்த தொழில் அதிபரான திரு. அல்போன்ஸ் பேத்ரோனி என்பவர் அங்கேயுள்ள சிற்றுண்டிச் சாலைக்கு தேனீர் அருந்துவதற்காகச் சென்றார். தற்செயலாக பக்கத்து மேஜையில் இருந்தவர்களின் பேச்சைக் கேட்க நேர்ந்தது. அவர்கள் ஈக்கோன் பண்ணை நிலத்தையும், கட்டிடத்தையும் பெர்நார்ட் துறவிகள் விற்க இருப்பதையும், அதனை கம்யூனிஸ்ட்காரர்கள் வாங்க முன்வந்திருப்பதாகவும் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள். அதனைக் கேட்ட

பக்தியுள்ள கத்தோலிக்கரான அல்போன்ஸ் திடுக்கிட்டார். அதோடு அவர்கள் அந்த கட்டிடத்தை வாங்கி அங்குள்ள  மாதா சிற்றாலயத்தை இடித்துவிட்டு, அங்கே இரவு கேளிக்கை விடுதி ஒன்றைக் கட்டும் திட்டத்தைப் பற்றி பேசிக் கொண்டிருந்ததைக் கேட்ட அவரது உள்ளம் துடித்தது! "ஆஹா! மற்றுமோர் துறவற இல்லம் அழிக்கப்படபோகிறது!" சமீப காலமாக திருச்சபையில் நடந்துவரும் நூதன மாற்றங்களால், விசுவாசக்கேடான செயல்களால் வேதனை அடைந்திருந்த அந்த நல்ல கத்தோலிக்கர் அப்போதே முடிவெடுத்தார். "இதைவிடக்கூடாது. ஏதாவது செய்ய வேண்டும். ஈக்கோன் காப்பாற்றப்பட வேண்டும்."

அந்த முடிவோடு வீடு திரும்பியவரை சந்திக்க வந்த அவரது நண்பரான திரு.கிராட்சியன் ரவுசி என்பவரும் செய்தியைக் கேட்டுப் பதறிப்போனார். "ஆஹா, ஈக்கோன் எப்பேர்ப் பட்ட புனிதமான இடம். பாரம்பரிய வரலாறு கொண்ட இடம். அதன் மாதா சேத்திரம் இடிக்கப்பட விடுவதா? அது எதிரிகளின் கைகளுக்குச் செல்வதாக? இதனைத் தடுக்க வேண்டும், அந்த கட்டிடத்தையும் நிலத்தையும் நாமே வாங்க வேண்டும்" என்று நண்பர்கள் முடிவெடுத்தனர். அப்போதே, அர்ச்.பெர்நார்ட் சபைத் தலைமை துறவியை தொலைபேசியின் மூலமாக தொடர்புகொண்டனர். அவரும் வாங்குவதாக இருந்தால் அவர்களுக்கே விற்பதாக உறுதியளிக்க, நண்பர்கள் செயல்படத் தொடங்கினர். தங்களுடன் திரு. மார்செல், திரு. ரோஜர் லோவே மற்றும் திரு. காய் ஜெனோ என்ற தங்களது நண்பர்களுடன் சேர்ந்து ஈக்கோன் பண்ணையை வாங்க முன்வந்தார்கள். அதற்கு பங்குத்தந்தை எப்பினே சுவாமி உதவ, 1968 மே 31-ம் நாள் இராக்கினியான மரியாயின் திருநாள் அன்று ஈக்கோன் பண்ணை நிலம் வாங்கப்பட்டது.

## குருமடம் உருவாகியது

ஈக்கோன் நிலத்தை வாங்கியவர்கள் அதில் உள்ள சிற்றாலயத்தை சீரமைத்தனர். நிலத்தில் பயிரிட்டனர். முதலில் மாடுகளை வளர்த்துவந்த அவர்கள் அங்கு திராட்சைத் தோட்டம் அமைத்தனர். இன்றுவரை இந்த திராட்சைத் தோட்டத்தில் குருமாணவர்கள் தங்கள் கோடைகால விடுமுறை முடிந்து குருமடத்திற்கு திரும்பின முதன் மாதத்திலே திராட்சைப் பழங்களை அறுவடை செய்யும் பணி நடந்துவருகிறது! இந்த நிலையில்தான்

அதிமேற்றிராணியார் வந்.மார்செல் லெஃபவர் ஆண்டகை தமது குரு மாணவர்கள் தங்கி பயில தகுந்த இடத்தை தேடிக் கொண்டிருந்தார். அவருக்கு ஏற்கெனவே அறிமுகமாயிருந்த பங்குத் தந்தை சங். ஹென்றி போன்வேன் சுவாமியின் மூலம் ஈக்கோனைப் பற்றி அறிய வந்தவர், அதனையே எதிர்கால குருக்களை உருவாக்கும் தமது முயற்சிக்கான குருமடமாக தெரிவு செய்தார். இதனைப் பற்றிக் குறிப்பிடுகையில், ஈக்கோன் நிலத்தை ஆண்டகையவர்களுக்கு வழங்கிய அதன் சொந்தக் கார்களில் ஒருவரான ரோஜர் லோவே, அர்ச்.பெர்நார்ட் சபை தலைவருக்கு எழுதிய கடிதத்தில், "ஈக்கோனில் கடந்த கால வரலாற்றை அறிகையில், அது ஞானக் காரியங்களுக்காகவே பயன்பட வேண்டும் என்பதை உணர்ந்தோம். அது எவ்விதத்திலும் பயன்படவில்லை என கைவிடக்கூடாது என்று முடிவெடுத்தோம்" என்று குறிப்பிடுகிறார். (1968 ஏப்ரல் 18 தேதியிட்ட கடிதம்) அதே போன்று, 1970, மே 24ம் தேதி, வந். லெஃபவர் ஆண்டகை குருமாணவர் பவுல் ஒலேங்கேவுடன் ஈக்கோனுக்கு வந்த நேரத்தில் மெத்ருலோவே, அல்போன்ஸ் பேத்ரோனி, மார்ஷல் பேத்ரோனி ஆகியோர் அவர்களை வரவேற்று சங்.பியர் எப்பினே சுவாமியை அறிமுகம் செய்து வைத்து, அருகிலிருந்த உணவு விடுதிக்கு சென்றனர். இறுதி வரை மவுனமாகவே இருந்த அல்போன்ஸ் பேத்ரோணி தனது மவுனத்தைக் கலைத்து பின்வரும் தீர்க்கதரிசனமான வார்த்தைகளை கூறினார்: "ஆண்டகையே, நான் உங்களுக்கு ஒன்று சொல்லுகிறேன்; உலகம் முழுவதும் இந்த குருமடத்தைப் பற்றி பேசுவார்கள்!"

ஆம்! இன்று ஈக்கோனிலுள்ள அர்ச். 10-ம் பத்திநாதர் சர்வதேச குருமடம் உலகம் முழுவதும் பேசப்படுகிறது.

The Biography of Archbishop Marcel Lefebvre -ல் இருந்து எடுக்கப்பட்டது.